# எட்டுத்தொகை அகநூல்களில் நெய்தல் நில உயிரினங்கள் உணர்த்தும் மெய்ப்பாடுகள்

**(Weaving land in octogenarian texts Realities sensed by living beings)**

ஆய்வாளர்

**செ. நியுராஜா,**
முனைவர் பட்ட ஆய்வாளர், (UGC-NET-SRF)
தமிழாய்வுத்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
(மேனாள் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி),
குரும்பலூர், பெரம்பலூர் - 621 107.

நெறியாளர்

**முனைவர் நா. ஜானகிராமன்,**
இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர்,
முதுகலை விரிவாக்க மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி,
பெரம்பலூர் - 621 107.

**ஆய்வுச்சுருக்கம்**

உலகில் நிலத்தின் பரப்பை விட நீரின் பரப்பளவே மூன்றுமடங்கு அதிகமாக உள்ளது. குறிஞ்சி முதல் இதர நிலப்பரப்புகளிலிருந்து பெருகியோடும் ஆறுகளின் முடிவிடம் கடலேயாகும். இந்த கடலும், கடல் சார்ந்த நிலத்தையும் நெய்தல் நிலம் என்று சங்கச் சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய நெய்தல் திணையில் ஓரறிவு உயிர்கள் முதல் ஐந்தறிவு உயிர்கள் வரை புன்னை மரம், நெய்தல் மரம், ஆலமரம், முண்டகம், அடும்புக்கொடி, தாழை மடல், முத்துச் சிப்பி, நண்டு, சுறாமீன், அயிரைமீன், இறால் மீன், நாரை, கொக்கு, அன்றில், மகன்றில், ஆந்தை, கடற்காக்கை, கோவேறு கழுதை, ஆமை, நாய் உள்ளிட்ட பல்வேறு வகையான உயிரினங்கள் வாழ்ந்துள்ளன. இத்தகைய அஃறிணை உயிரினங்கள் தம் உடல்மொழியின் வாயிலாகத் தமது உள்ளுணர்வுகளைத் தெரிவிக்கின்றன. உடல் அசைவினாலும், குறிப்பிட்ட ஒலி ஒழுங்கினாலும் வெளிப்படுத்தப்படும் மொழி மனித உடலுக்கு மட்டுமே உரியதன்று. நெய்தல்நிலவாழ் உயிரினங்களும் தம் உடல்மொழியின் மூலமாத் தன் கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்கின்றன. இவ்விதமாகவே அவைகள் தங்களின் ஒரு சில உணர்வுகளைச் சமிக்கைகளின் மூலமாக வெளிப்படுத்துகின்றன. அவற்றை, **எட்டுத்தொகை அகநூலில்**

**நெய்தல் நில உயிரினங்கள் வாயிலாக புலனாகும் மெய்ப்பாடுகளை** இவ்வாய்வு வெளிக்கொணருகின்றது.

**முன்னுரை**

நெய்தல் திணை என்பது கடலும் கடல் சார்ந்த பகுதியாகும். நெய்தல் நில மக்களின் வாழ்வியல் ஆதாரமாக விளங்குபவை கடலாகும். அத்தகைய கடல்பகுதியில் காணப்படக்கூடிய முத்துச்சிப்பியும், அயிலைமீன், சுறாமீன், இறால் மீன், கடற்கரை மணற்பரப்பில் ஊர்ந்து திரியக்கூடிய ஆமை, நண்டு பற்றியும், கடற்கரைச் சூழலுக்கு ஏற்பத் தன் வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக்கொண்டு வாழும் கொக்கு, நாரை, அன்றில், மகன்றில் போன்ற பல்வேறு வகையான உயிரினங்களும் இங்கு வாழ்ந்து வருகின்றன. அத்தகைய உயிரினங்கள் தங்களது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்திய விதத்தினை சங்கப்புலவர்கள் நெய்தல் திணைப்பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய பாடல்களில் புலப்படும் மெய்ப்பாடுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**ஆமையின் அன்பு**

சூலுற்ற பெண் ஆமை, முட்டைகளை ஈன்று மணலில் புதைத்து வைக்கின்றன. அதனை ஆண் ஆமை அன்பு காட்டி அடைகாப்பதாக, அகநானூற்றுப்பாடலில் காணமுடிகிறது. இதனை,

**“நிறைசூல் யாமை மறைத்தீன்று புதைத்த
கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டைப்
பார்ப்பிட னாகும் அளவைப் பகுவாய்க்
கணவ னோம்புங் காலைஞ் சேர்ப்பன்”**[1]

என்ற பாடலடிகள் விளக்கி உரைக்கின்றன. இதில் ஆமையின் தன்மையும், அன்பும் வெளிப்படுகின்றன.

**நாரை உறங்குதல்**

பரந்த நீர் நிலையில் உள்ள பிரம்போடு, கூடி நீண்டு வளர்ந்திருக்கும் முள்ளையுடைய, ஈங்கையின் பஞ்சு போன்ற தூய்யினைவுடைய புதிய பூவும், மாமரத்தின் தளிரும் தன்னைத் தடவுதலால் மீனையுண்ட நாரை உறங்கும் என்பதை,

**“பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்கொம் பீங்கைத் தூய்த்தலைப் புதுவீ
ஈன்ற மாத்தின் இளந்தளிர் வருட
ஆர்குருகு உறங்கும்”**[2]

என்ற மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் அகநானூற்றுப் பாடலடிகளில் எடுத்தியம்பியுள்ளார். இதைப் போன்றே,

**“வதிகுருகு உறங்கும் இன்நிழற் புன்னை”**[3]

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

என்ற குறுந்தொகைப் பாடலும் வெளிப்படுத்துகின்றன.

மேலும், மீனினை உணவாகப் பெறும் பொருட்டுக் கழியின் நீரை ஆராய்ந்து தம் பசியினைத் தீர்த்துக்கொண்ட வெண்குருகுகளானது, தன் பசித்தீர்ந்தபின் அங்குள்ள கடற்கரையிடத்தே உள்ள தாழைகளிடத்து சென்று உறங்கும். இதனை,

**"கழிதேர்ந்து அசைஇய கருங்கால் வெண்குருகு**

**அடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்**

**உடைதிரை ஒலியின் துஞ்சும் துறை"[4]**

என்ற பாடலடிகளின் மூலம் பறவைகளின் உறக்கம் (துஞ்சல்) எனும் மெய்ப்பாடு புலனாகின்றது.

**நாரையின் முதுமையும் வருத்தமும்**

முதுமையுற்றதனாலே தன் சிறகுகளின் வலிமை நீங்கிப் போகப்பெற்ற நாரையானது, கீழ்க்கடலின் அலையருகே இருந்தவாறு, மேற்கடற்கரையின்கண் தான் முன்னர் உண்டு இன்புற்ற நினைவாலே அயிரை மீனாகிய இரையைப் பெறுதற்பொருட்டு அவாவித் தலையை மேலெடுக்கும். அது கிடைக்காததால் வருந்தித் துயருற்று வாடும். இந்நிகழ்வினை,

**"குணக்கடல் திரையது பறைதபு நாரை**

**திண்தோர்ப் பொறையன் தொண்டி முன்துறை**

**அயிரை ஆர்இரைக்கு அணவந் தாஅங்கு"[5]**

என்ற பாடலடிகள் வாயிலாக ஆசிரியர், முதுமையினால் நாரை வருந்தித் துன்பமடைவதைப் புலப்படுத்துகின்றார்.

**அன்றிலின் வருத்தம்**

இரவும் பகலும் நீங்காது மழைப் பெய்து கொண்டிருக்கும் குளிர்ந்த காலத்தில் வாடைக்காற்று வீசுகிறது. அதனால் நடுக்கமுற்று நள்ளிரவில் தன் துணை இல்லாது தனித்து இருக்கும் அன்றில் பறவை வருத்தத்தை வெளிப்படுத்தி குரலை எழுப்புகிறது என்பதை,

**"பராரைப் பெண்ணைச் சேக்கும், கூர்வாய்**

**ஒருதனி அன்றில் உயவுக்குரல் கடைஇய"[6]**

என்ற அகநானூற்றின் அடிகள் உணர்த்துகின்றன.

**அன்றிலின் அன்பு**

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்தால் உறங்காத தன்மை உடைய அன்றில் சேர்ந்து வாழும் தன்மையுடையது. எப்போதும் பிரியாது இருக்கும் அன்பை உடையது என்பதை,

**"மனைசேர் பெண்ணை மழவாய் அன்றில்**

**துணைஒன்று பிரியினும் துஞ்சாகாண்"[7]**

என்ற பாடலடிகள் உரைக்கின்றன.

**மீன் கொத்திப் பறவையின் சோம்பல்**

தாமரை செறிந்த வயலிடத்துப் பொரி தெளித்தாற் போன்று துள்ளிப் பாய்கின்ற மீனினை உண்டு விட்டு மெத்தென மயங்கி சோம்பலாக இருப்பதாக, அகநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. இதனை,

**"எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்**

**பொரியகைந் தன்ன பொங்குபல சிறுமீன்**

**வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப்**

**பறைதபு முதுசிரல் அசைபுவந் திருக்கும்"[8]**

என்ற பாடல் சுட்டுகிறது. இதில் மீன்கொத்திப் பறவை முதுமை காரணமாக சோம்பலுறுவதாகக் காட்டப்படுகிறது.

**முதலைத் துஞ்சல்**

நீரின் நிறம் மறையும்படி உதிர்ந்த மலர்கள் செறிந்து விரிந்து வேகமாக ஓடும் கான் ஆற்றில் கிடக்கின்றன. இதில் முதலை உறங்குவதாகக் கபிலர் கூறுகின்றார். இதனை,

**"நீர்நிறம் கரப்ப ஊழுறு புதிர்ந்து**

**பூமலர் கநலிய கடுவரற் கான்யாற்றுக்**

**கராஅந் துஞ்சும் கல்லுயர் மறிசுழி"[9]**

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

**கடற்காக்கையின் கனவு**

சிறிய கடற்காக்கை தாழை மரத்தின் தாழ்ந்த கிளையில் தாம் விரும்பும் பெண் பறவையுடன் வருத்தமுடன் தளர்ந்திருக்கும். புரதவர் மீன் வேட்டையாடலைச் செய்யாது சோம்பியிருப்பர். அப்பொழுது சிறிய கடற்காக்கை சுறாமீன் திரியும் கடற்பரப்பில் இறாமீனைப் பிடித்து தின்பதாய்க் கனவு காணும் என்பதனை,

**"கடற்சிறு காக்கை காமர் பெடையொடு**

**கோட்டுமீன் வழங்கும் வேட்டம்மடி பரப்பின்**

**வேள்இறாக் கனவும் நள்ளென் யாமத்து"**[10]

என்ற பாடலடிகளின் வாயிலாக புலனாகின்றது.

**அன்னத்தின் இன்புறல்**

வானத்தில் பறத்தலையுடைய அன்னப்பறவைகள், மின்னலைச் செய்யும் தொகுதியுடையதாகிய மேகமானது மழை பெய்தலைத் தொடங்கியதும் அவ்வன்னப்பறவையானது, அம்மழை பெய்தலை வரவேற்று இன்புறுவதாய் விரும்பி மேலேழுந்து பறக்கத் தொடங்கும். இதனை,

**"மின்னுச்செய் கருவிய பெயல்மழை தூங்க**

**விசும்புஆடு அன்னம் பறைநிவந் தாங்குப,**

**பொலம்படைப் பொலிந்த வெண்தேர் ஏறிக்,**

**கலங்குகடற் றுவலை ஆழி நனைப்ப**

**இனிச்சென் றனனே"**[11]

என்ற பாடல் மூலம் அன்னத்தின் இன்புறளை ஆசிரியர் புலப்படுத்துகின்றார்.

**நண்டின் தன்துணை அன்பு**

நீர்நிலைகளின் துறைமுகப்பகுதிகளின் அருகே உள்ள அகன்ற இலைகளை உடைய நாவல் மரத்திலிருந்து உதிர்ந்து கீழே விழும் நாவற்பழங்களை ஆண் நண்டானது அதன் அழகு அழிய இழுத்துக்கொண்டு சென்று, தாழைச் செழியின் வேர்ப்பாகத்தில் உள்ள அவற்றின் இருப்பிடத்தில் உள்ள தன் அன்பு பொருந்திய பெண் நண்டுக்குத் தருகின்றது. இந்நிகழ்வினை,

**"நெருநை**

**அகலிலே நாவல் உண்துறை உதிர்த்த**

**கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்**

**தாழை வேர்அளை வீழ்துணைக்க இடூஉம்**

**அலவற் காட்டி"**[12]

என்ற அகநானூற்றுப் பாடல்வழி அறியமுடிகின்றது. தன்துணைமீது எவ்வாறு அன்பைப் பேணவேண்டும் என்பதை ஆண்மக்கள் இப்பாடலின் வழி

நண்டிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை ஆசிரியர் புலப்படுத்துகின்றார்.

**நண்டின் அச்சம்**

கடற்கரைப் பகுதியில் உள்ள பெண்கள் அங்குள்ள கடல்நீரில் குளித்து விளையாடுகின்றனர். அவர்கள் நீரில் விளையாடுவதனைக் கண்ட நண்டானது, அப்பெண்கள் தம்மைத்தான் பிடிக்க வருகின்றார்கள் என்று அஞ்சி கடலுக்குள் ஓடுகின்றது. இதனை,

**"அடும்பின் ஆய்மலர் விரைஇ, நெய்தல்**

**நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்**

**ஓரை மகளிர் அஞ்சி, ஈர்ஞெண்டு**

**குடலில் பரிக்கும்"[13]**

என்ற குறுந்தொகைப் பாடல்மூலம் புலனாகின்றது.

மேலும், கொக்கின் பார்வையைக் கண்டு அஞ்சிய நண்டானது, தாழை வேர்களிடையேயுள்ள தன் இருப்பிடத்திற்கு விரைந்துசென்று புகுந்து தன்னைக் காத்துக்கொள்ளும். இந்நிகழ்வினை,

**"மாரி ஆம்பல் அன்ன கொக்கின்**

**பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு**

**கண்டல் வேர்அலைச் செலீஇயர்"[14]**

எனும் பாடலடிகளின் வாயிலாக ஆசிரியர், நண்டின் அச்சத்தினைப் பதிவுசெய்துள்ளார்.

**முடிவுரை**

கடலும் கடல் சார்ந்த பகுதியில் வாழும் நெய்தல் நில மக்களின் வாழ்வியல் ஆதாரமாக விளங்கும் கடல்பகுதியில் காணப்படக்கூடிய, ஊர்ந்து திரியக்கூடிய ஆமை, நண்டு பற்றியும், கடற்கரைச் சூழலுக்கு ஏற்பத் தன் வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக்கொண்டு வாழும் கொக்கு, நாரை, அன்றில், மகன்றில் போன்ற பல்வேறு வகையான உயிரினங்களும் தங்களது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்திய விதத்தினை சங்கப்புலவர்கள் நெய்தல் திணைப்பாடல்களில் பதிவுசெய்துள்ளனர். அவற்றுள், நெய்தல் நிலவாழ் உயிரினங்களும் குடும்ப உணர்வு கொண்டதாகவும், தன் துணையின்மீது அன்பு கலந்த வாழ்க்கையை மேற்கொண்டுள்ளதை இக்கட்டுரை மூலம் புலனாகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. அகநானூறு, பா.160, அடி. - 5-8
2. மேலது., பா.306, அடி. - 2-5
3. குறுந்தொகை., பா.5, அ. - 2
4. மேலது., பா.303, அடி. - 1-3
5. மேலது., பா.128, அடி. - 1-3
6. அகநானூறு, பா.305, அடி. - 12-13
7. மேலது., பா.50, அடி. - 11-12
8. மேலது., பா.106, அடி. - 1-4
9. மேலது., பா.18, அடி. - 1-3
10. மேலது., பா.170, அடி. - 10-12
11. குறுந்தொகை, பா.205, அடி. - 1-5
12. அகநானூறு, பா.380, அடி. - 3-7
13. குறுந்தொகை, பா.401, அடி. - (1-4)
14. மேலது., பா.117, அடி. - (1-3)

**பார்வை நூல்கள்**

1. **இராசமாணிக்கனார், டாக்டர் மா., (2011) - கலித்தொகை**, பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை - 600 018.
2. **சாமிநாதையர். உ.வே., (1995) – குறுந்தொகை** - மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு, கபீர் அச்சுக் கூடம், சென்னை - 600 018.
3. **பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், அ., (2000) - நற்றிணை**, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே சாலை, சென்னை - 600 018.
4. **வேங்கடசாமி நாட்டார், நா.மு., (1943) - அகநானூறு,** திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே சாலை, சென்னை - 600 018